**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

2026–ம் ஆண்டு ஜூலை மாதம் 02–ம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பு 1–ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண்.44வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு. சிவா என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | **அர்ச்சுணன்** | தொழில்: | |
| த.பெ: | சுப்பையா | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**02.07.2026 OS.13/2020 வா.சா.1 அர்ச்சுணன்**

**வாதி தரப்பு முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் தரப்பினர் அல்ல. வாதி எனது மனைவி ஆவார். வாதி தரப்பு 1 ஆம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை படித்து காண்பித்து பின்பு நான் அதில் கையெழுத்து செய்துள்ளேன். பிராமண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்துகொள்ள வேண்டுகிறேன்.

1) கடந்த 23.06.2003 ம் தேதி அர்ச்சுனன் செட்டிப்பிள்ளை மகன் வீரன் மற்றும் அவரது மைனர் மக்களிடம் ( 4 அடி X 15 அடி) பாதைக்காக கிரையம் பெற்ற பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரம் ( ஆவண எண்.877/2003) அசல் தாக்கல் செய்கிறேன். **மேற்படி பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரம் ( ஆவண எண்.877/2003) அசல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

2) கடந்த 23.06.2003 ம் தேதி வாதியின் கணவர் அர்ச்சுனன் (நான்) சிவசாமியாபிள்ளை மகன் தனபாலனிடமும் மற்றும் அவரது மைனர் மக்களிடம் ( 18அடி X 15 அடி) வீடு கட்டுவதற்காக கிரையம் பெற்ற பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரம் (ஆவண எண். 880/2003) அசல் தாக்கல் செய்கிறேன். **மேற்படி வீடு கட்டுவதற்காக கிரையம் பெற்ற பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரம் (ஆவண எண். 880/2003) அசல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.07.02 17:36:08 +0530

3) கடந்த 01.04.2010 ம் தேதி வாதி கிருஷ்ணம்மாள் என்பவர் சிவசாமியாபிள்ளை மகன் தனபாலனிடம் தாவா சொத்து உள்ளிட்ட மனையிடத்தை ( 11அடி X 130 அடி) கிரையம் பெற்ற பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரம் (ஆவண எண். 1597/2010) அசல் தாக்கல் செய்கிறேன். **மேற்படி கிரையம் பெற்ற பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரம் (ஆவண எண். 1597/2010) அசல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

4) கடந்த 13.02.2019 ம் தேதி வாதியின் கணவர் பிரதிவாதி மீது சிவகங்கை மாவட்ட கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகார் மனுவிற்கான ஏற்புச்சான்றிதழ் அசல் தாக்கல் செய்கிறேன். **மேற்படி வாதியின் கணவர் பிரதிவாதி மீது சிவகங்கை மாவட்ட கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகார் மனுவிற்கான ஏற்புச்சான்றிதழ் அசல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

5) பிரதிவாதி மீது குற்றவழக்கு நிலுவையில் உள்ளதை காட்டக்கூடிய ஆவணம் பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன். **மேற்படி பிரதிவாதி மீது குற்றவழக்கு நிலுவையில் உள்ளதை காட்டக்கூடிய ஆவணம் பதிவிறக்க நகல் பிரதிவாதி தரப்பு ஆட்சேபனையோடு வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

6) கடந்த 07.07.1999 ம் தேதி பிரதிவாதி தனபாலிடம் கிரையம் பெற்ற பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **மேற்படி பிரதிவாதி தனபாலிடம் கிரையம் பெற்ற பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

7) கடந்த 19.02.2020 ம் தேதி தாவா சொத்திற்கான வழிகாட்டி மதிப்பு பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன். **மேற்படி தாவா சொத்திற்கான வழிகாட்டி மதிப்பு பதிவிறக்க நகல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

8) கடந்த 28.03.2022 ம் தேதி வாதியின் கணவர் (நான்) பிரதிவாதி மீது சிவகங்கை மாவட்ட கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகார் மனுவிற்கான ஏற்புச்சான்றிதழ் அசல் தாக்கல் செய்கிறேன். **மேற்படி வாதியின் கணவர் பிரதிவாதி மீது சிவகங்கை மாவட்ட கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகார் மனுவிற்கான ஏற்புச்சான்றிதழ் அசல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

R
VENKADESH
PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.07.02 17:36:14 +0530

9) கடந்த 06.12.2023 ம் தேதியிட்ட நீதிமன்ற ஆணையர் அறிக்கை **நீ.ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10) கடந்த 06.12.2023 ம் தேதியிட்ட நீதிமன்ற ஆணையர் வரைபடம் **நீ.ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**பிராதுபடி தீர்ப்பு செய்ய வேண்டுகிறேன்.**

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).**

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.07.02 17:36:20 +0530

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam